**செய்தி வெளியீடு எண் : 577** **நாள் : 13.03.2025**

**நிதி (வழிவகைகள்–II )த் துறை,**

தமிழ்நாடு அரசு மொத்தம் **ரூபாய் 7000 கோடி மதிப்பில் 3 ஆண்டுகள் 6 மாத காலப் பிணையப் பத்திரங்கள் ரூபாய் 1000 கோடி, 4 ஆண்டுகள் 6 மாத காலப் பிணையப் பத்திரங்கள் ரூபாய் 1000 கோடி, 5 ஆண்டுக்கால பிணையப் பத்திரங்கள் ரூபாய் 1000 கோடி, 8 ஆண்டுக்கால பிணையப் பத்திரங்கள் ரூபாய் 2000 கோடி. 20 ஆண்டுக்கால பிணையப் பத்திரங்கள் ரூபாய் 1000 கோடி மற்றும் 30 ஆண்டுக்கால பிணையப் பத்திரங்கள் ரூபாய் 1000 கோடி** ஏலத்தின் மூலம் விற்பனை செய்யவிருப்பதாக அறிவித்துள்ளது. இந்த ஏலம் இந்திய ரிசர்வ் வங்கியால், மும்பையில் உள்ள அதன் மும்பை கோட்டை அலுவலகத்தில் **மார்ச் 18, 2025** அன்று நடத்தப்படும். போட்டி ஏலக் கேட்புகள் முற்பகல் 10.30 மணியிலிருந்து 11.30 மணிக்குள்ளாகவும் போட்டியற்ற ஏலக் கேட்புகள் முற்பகல் 10.30 மணியிலிருந்து 11.00 மணிக்குள்ளாகவும் இந்திய ரிசர்வ் வங்கியின் ஒருங்கிணைந்த வங்கி சேவை முறையில் [Reserve Bank of India Core Banking Solution (E–Kuber) System] மின்னணு படிவத்தில் (Electronic format) **மார்ச் 18, 2025** அன்று சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

அரசு முதன்மை செயலாளர்,
நிதித்துறை, சென்னை.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu